# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 43 | 4 Pages | 13.09.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 43 | 4 பக்கங்கள் | 13.09.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார் செஸ் வீரர் குகேஷ்

சென்னை, செப். 13

லைவ் ரேட்டிங் தர வரிசை பட்டியலில், உலக கோப்பை செஸ் போட்டியில் காலிறுதி வரை முன்னேறிய குகேஷ் 2758 புள்ளிகளுடன் 8வது இடத்தை பிடித்தார். முன்னாள் உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் 2754 புள்ளிகளுடன் 9வது இடத்தில் உள்ளார்.




தமிழகத்தை சேர்ந்த செஸ் வீரர் குகேஷ், இந்தியாவின் நம்பர் ஒன் செஸ் வீரராக இடம் பிடித்துள்ளார். கடந்த மாதம் சர்வதேச செஸ் கூட்டமைப்பின் தரவரிசை பட்டியலில் (லைவ் ரேட்டிங்) 17 வயதான குகேஷ் 2755.9 புள்ளிகளுடன் 8வது இடத்தை பிடித்து விஸ்வநாதன் ஆனந்தை (2754 புள்ளி) முந்தினார். சர்வதேச செஸ் கூட்டமைப்பு சார்பில் ஒவ்வொரு மாதமும் ரேட்டிங் பட்டியல் வெளியிடப்படும். அதன்படி, லைவ் ரேட்டிங் தர வரிசை பட்டியலில், உலக கோப்பை செஸ் போட்டியில் காலிறுதி வரை முன்னேறிய குகேஷ் 2758 புள்ளிகளுடன் 8வது இடத்தை பிடித்தார். முன்னாள் உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் 2754 புள்ளிகளுடன் 9வது இடத்தில் உள்ளார். இதன்மூலம் குகேஷ் 37 ஆண்டுகளாக இந்தியாவின் நம்பர் ஒன் இடத்தில் இருந்த விஸ்வநாதன் ஆனந்தை முந்தி அந்த இடத்தை அதிகாரப்பூர்வமாக பிடித்தார். இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில், இந்தியாவின் நம்பர் ஒன் செஸ் வீரர் குகேஷ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், குகேஷுக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். மேலும் செஸ் வீரர் குகேஷுக்கு தமிழக அரசு சார்பில் 30 லட்சரூபாய் ஊக்கத்தொகையாக நிதியுதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைஅமைச்சர்உதயநிதிஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்செயலர்ஜெ. மேகநாதரெட்டி, வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் எம்.வி.எம். வேல் மோகன் மற்றும் குகேஷின் பெற்றோர் ஆகியோர் உடன் இருந்தனர்.

## மலை கிராமத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

ஈரோடு, செப். 13

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த பர்கூர் மலை கிராம பகுதியில் வசிக்கும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜவகர் தலைமையில் நடைபெற்றது. அந்தியூர் காவல் ஆய்வாளர் செந்தில்குமார் வரவேற்றார். அருணா கல்வி உடல் ஊன முற்ற இளைஞர் வாழ்வு பற்றி சிறப்புரை ஆற்றினார், சிறப்பு பிரிவு முருகன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.அப்போது பேசிய மாவட்ட காவல்துறை கண்




காணிப்பாளர் ஜவகர், குழந்தைகளின் கல்வி ஒழுக்கம் எஸ்.டி மக்களுக்கான வேலை வாய்ப்பு முன்னுரிமை, விவசாய தொழில், குழந்தை திருமணம் தடுத்தல் மேலும் காவல்துறையினரும், பொதுமக்களும் நண்பர்களாக பழக வேண்டும். காவல்துறையினரை கண்டு தேவையின்றி அச்சப் படத் தேவையில்லை. மலைப் பகுதிகளில் புதிய நபர்கள் நடமாட்டம் இருப்பின் அதனை காவல்துறையினருக்கு தகவலை தெரிவிக்க வேண்டும். காவல்துறை தங்களின் நண்பர்கள் என்று எண்ணி பழகி அவர்களிடத்தில் சுமுக உறவோடு இருந்து குற்ற செயல்கள் நடைபெறாமல் தடுக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்று மலைவாழ் மக்களிடத்தில் எடுத்து கூறினார்.நிகழ்ச்சியில் மங்களம் கல்வி நிறுவனத்தைச் சார்ந்த ராமசாமி, சேக்தாவூத் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் பர்கூர் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் முருகன் நன்றியுரை கூறினார்.

## திருக்கோவிலூரில் இ.கம்யூ. கட்சி மறியல் போராட்டம்

கள்ளக்குறிச்சி, செப் .13

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் மத்திய பாஜக அரசை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் செப்டம்பர் 12, 13, 14, ஆகிய தேதிகளில் மாநிலம் தழுவிய தொடர் மறியல் போராட்டம் நடைபெறும் என கட்சியின் தலைமை அறிவுறுத்தலின்படி திருக்கோவிலூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேருந்து நிலையத்தில் இருந்து நான்கு முனை சந்திப்பு சாலையில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகமான பாரத வங்கியின் முன்பு அக்கட்சியை சேர்ந்த




2500மேற்பட்டோர்பேரணிசென்று விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தாத மத்திய அரசைகண்டித்தும் விவசாய விளைபொருளுக்கு உரிய விலை, மோட்டார் வாகன சட்ட திருத்தத்தை கைவிடுதல், பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பதை கை விடுதல்போற பல அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் போராட்டம் நடத்தினர்.இக்கூட்டத்தில்மாவட்ட செயலாளர் கே.ராமசாமி மாவட்ட துணை செயலாளர்கள் அ.சுப்பிரமணியன் மாவட்ட பொருளாளர் எம்.வெங்கடேசன் மாவட்ட செயற்குழு மு.கலியபெருமாள் எஸ்.தேவேந்திரன் இரா.கஜேந்திரன் என்.வேலு ஒன்றிய செயலாளர் கே.இரவி நகர செயலாளர் பி.எச். கிப்ஸ் நகரக் குழு PHK.பஷீர் அகமது AIYF மாவட்ட செயலாளர் எஸ். விஜய் ஆகியோர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷமிட்டு சென்றனர். காவல்துறையினர் இப்போராட்டத்தை தடுத்து நிறுத்தி கைது செய்து பின்னர் விடுதலை செய்தனர்.

## கலெக்டர் தலைமையில் நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 382 பேர் மனு

திருப்பூர், செப். 13

பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது. மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டர் அறிவுறுத்தினார்.

திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டம்கலெக்டர்கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, புதிய ரேஷன் கார்டு, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக 382 மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டர் அறிவுறுத்தினார். இதில் மாவட்ட வருவாய் அதிகாரி ஜெய்பீம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் லட்சுமணன், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) செல்வி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) விஜயராஜ், துணை ஆணையாளர் (கலால்) ராம்குமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## மாணவர்களின் கற்றல் திறன் அறிய அனைத்து தேர்வுகளுக்கும் பொது வினாத்தாள் முறை

திருப்பூர், செப். 13

காலாண்டு தேர்வுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் தயாரித்து அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கல்வித்துறை சார்பில் வினாத்தாள் அச்சிட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படும். பள்ளிக்கல்வித்துறையில் 6 முதல் பிளஸ் 2 வரையிலான மாணவர்களுக்கு வரும் 19ந் தேதி முதல் 27ந் தேதி வரை, காலாண்டு தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.இத்தேர்வுக்கு வழக்கமாக, அந்தந்த மாவட்ட கல்வித்துறை சார்பில் வினாத்தாள் அச்சிட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படும். ஆனால் தற்போது நடக்கவுள்ள காலாண்டு தேர்வுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் தயாரித்து அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து வரும் வினாத்தாளை அந்தந்த மாவட்டங்களில் நகலெடுத்து தேர்வு நாளன்று காலை பள்ளிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அரசுப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் கூறுகையில், காலாண்டு தேர்வை பொதுவினாத்தாள் முறையில் நடத்துவதன் மூலம், கல்வியில் பின்தங்கிய பள்ளிகளை கண்டறியலாம். அங்குள்ள நடைமுறை சிக்கல்களுக்கு தீர்வு காணலாம். குறிப்பாக 6ம் வகுப்பில் இருந்தே, பொது வினாத்தாள் முறையில் இனிவரும் தேர்வுகளை நடத்த வேண்டும். அப்போது தான் மாணவர்களின் கற்றல் நிலையை பரிசோதிக்க முடியும் என்றனர்.

## சனாதனத்தை எதிர்த்தால் நாக்கை பிடுங்குவோம், கண்ணை நோண்டுவோம்: மத்திய அமைச்சர்



ராஜஸ்தான், செப். 13

சில தினங்களுக்கு முன், தமிழக அமைச்சரவையின் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி, ஒரு விழாவில் பேசும் போது, "சனாதனம் எதிர்க்கப்பட வேண்டியது அல்ல, ஒழிக்கப்பட வேண்டியது" என கருத்து தெரிவித்தார். இக்கருத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் இந்தியாவெங்கும் பலர் கருத்துக்கள் கூறி வருகின்றனர். உதயநிதியின் கருத்து பெரும் சர்ச்சையை நாடு முழுவதும் உண்டாக்கியிருக்கிறது. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த பா.ஜ.க.வின் பாராளுமன்ற உறுப்பினர், கஜேந்திர சிங் ஷெகாவத் (55). மத்திய 'ஜல் சக்தி' மந்திரியாக இருக்கும் இவர், கேபினெட் அமைச்சராக பதவி வகிப்பவர். நேற்று ஷெகாவத், பா.ஜ.க. சார்பாக ராஜஸ்தானின் பார்மர் பகுதியில் நடைபெற்ற பரிவர்த்தன் யாத்திரையில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அதில் அவர் கூறியதாவது: உயிரை தியாகம் செய்து நமது முன்னோர்கள் கட்டி காத்து வந்த சனாதன தர்மத்தை சிலர் அழிக்க நினைக்கின்றனர். அவர்களை இனியும் சகித்து கொள்ள முடியாது. சனாதன தர்மத்திற்கு எதிராக பேசுபவர்களுக்கு நான் ஒன்று சொல்லி கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இவ்வாறு பேசினால் உங்கள் நாக்கை பிடுங்கி விடுவோம். எங்களை கீழ்த்தரமாக, அவமரியாதையுடன் பார்ப்பவர்கள் அனைவரின் கண்களும் பிடுங்கப்படும். சனாதனத்திற்கு எதிராக பேசும் எவரும் இந்தியாவில் ஒரு நிலையான அரசியல் செய்து விட முடியாது. இவ்வாறு கஜேந்திர சிங் தெரிவித்தார். உதயநிதியின் சனாதனம் தர்மம் குறித்த கருத்து விவகாரம் தற்போது சற்று ஓய்ந்த நிலையில், பா.ஜ.க.வின் கேபினெட் அந்தஸ்திலுள்ள அமைச்சர் இவ்வாறு கடுமையாக கருத்தை தெரிவித்துள்ளார்.

## டீசல் வாகனங்களுக்கு கூடுதலாக 10 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி: நிதின் கட்காரி பரிந்துரை



புதுடெல்லி,செப். 13

டீசல் வாகனங்களுக்கு கூடுதலாக 10 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மத்திய சாலை போக்குவரத்து துறை மந்திரி நிதின் கட்காரி பரிந்துரை செய்துள்ளார்.

இந்தியாவில் டீசல் வாகனங்களின் பயன்பாட்டை குறைக்கும் வகையில் இந்த வாகனங்களுக்கு கூடுதலாக 10 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக மத்திய சாலை போக்குவரத்து துறை மந்திரி நிதின் கட்காரி பரிந்துரை செய்து ள்ளார். மாசு வரி என்ற பெயரில் கூடுதல் ஜி.எஸ்.டி. வரி விதிக்க மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. சனாதனத்தை எதிர்ப்பதற்கு சோனியா ராகுலே காரணம்: ஜே.பி.நட்டா குற்றச்சாட்டு



புதுடெல்லி, செப். 13

சனாதனம் பற்றிய பேச்சுகளுக்கு அவர்களுக்கு உரிய பதிலடி கொடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடி தெரிவித்து இருந்தார். ராகுல், சோனியா மற்றும் காங்கிரசுக்கு சனாதனத்தின் மீது வெறுப்பு உள்ளது.

தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி "சனாதனம்" பற்றி பேசிய பேச்சுக்கள் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசா, அமைச்சர் பொன்முடி ஆகியோரும் சனாதனம் குறித்து பேசி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளனர். சனாதனம் பற்றிய பேச்சுகளுக்கு அவர்களுக்கு உரிய பதிலடி கொடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடி தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் பா.ஜனதா தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, சனாதனத்துக்கு எதிராக தி.மு.க. பேசி வருவதற்கு சோனியாவும், ராகுலும் தான் காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக ஜே.பி.நட்டா வெளியிட்டு உள்ள எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது: ராகுல், சோனியா மற்றும் காங்கிரசுக்கு சனாதனத்தின் மீது வெறுப்பு உள்ளது. சனாதனத்தின் மீது இந்தியா கூட்டணி கட்சிகளுக்கு வெறுப்பு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## பாகிஸ்தான் ஆக்ரமித்துள்ள காஷ்மீர், தானாக இந்தியாவுடன் இணையும் : வி.கே.சிங்

ராஜஷ்தான், செப். 13

இந்திய ராணுவத்தின் மிக உயர்ந்த பதவி வகித்தவர், நான்கு நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஜெனரல். விஜய் குமார் சிங் (72). ஜெனரல். வி.கே. சிங், தனது பதவிக்காலம் முடிந்த பிறகு, ஆளும் பா.ஜ.க. அரசால் அமைச்சராக பதவியில் அமர்த்தப்பட்டவர். இவர் தற்போது சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சரவையில் அமைச்சராக உள்ளார். ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. சார்பாக நடந்து வரும் பரிவர்த்தன் சங்கல்ப யாத்திரையில் கலந்து கொண்டு பல மத்திய அமைச்சர்களும் உரையாற்றி வருகின்றனர். இந்த யாத்திரையின் ஒரு பகுதியாக அம்மாநில டவுஸா மாவட்டத்தின்தலைநகர்டவுஸாவில்ஒருபத்திரிக்கையாளர்சந்திப்பில்ஜெனரல். வி.கே. சிங் கலந்து கொண்டார். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான உறவு குறித்து கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். 1947 முதல் பாகிஸ்தான் ஆக்ரமித்துள்ள காஷ்மீர் (PoK) பகுதியில் மொத்தம் சுமார் 40 லட்சம் மக்கள் தொகை கொண்ட இப்பிராந்தியத்தில் 97 சதவீதம் பேர் இஸ்லாமியர்கள். இது, ஆஸாத் காஷ்மீர் மற்றும் கில்கிட்பல்டிஸ்தான் என இரு பகுதிகளாக உள்ளது. சில நாட்களுக்கு முன் கில்கிட்பல்டிஸ்தான் பகுதியில் ஸ்கர்டு (Skardu) டவுனில் பாகிஸ்தானின் புது சட்டங்களுக்கெதிராக ஒரு பேரணி நடைபெற்றது. அது பாகிஸ்தான் அரசுக்கெதிரான பேரணியாக மாறி, இந்தியாவின் கார்கில் பகுதிக்கு செல்லும் பாதை திறந்து விடப்பட வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்ட ஷியா பிரிவினர் கோஷமிட்டனர். "பாகிஸ்தான் ஆக்ரமித்துள்ள காஷ்மீர் (PoK) பகுதி, தானாக இந்தியாவுடன் இணைந்து விடும். சிறிது காலம் காத்திருங்கள்" என இச்சம்பவம் குறித்த கேள்விக்கு பதிலளித்த வி.கே.சிங் தெரிவித்தார். இவரது கருத்தை மகாராஷ்டிர மாநிலத்தின் சிவ சேனா (உத்தவ் பிரிவு) கட்சியின் சஞ்சய் ராவத் வரவேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குமாரபாளையம் அங்காளம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



நாமக்கல், செப். 13

குமாரபாளையத்தில் சின்னப்ப நாயக்கன்பாளையம் அங்காளம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இந்த விழாவில் திரளான பக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

நேற்றுமுன்தினம் கணபதி யாகத்துடன் தொடங்கிய விழா பின்னர் பவானி கூடுதுறை காவிரி ஆற்றிலிருந்து பம்பை, மேள, தாளங்கள் முழங்க, தீர்த்தக்குடங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

மாலையில் யாக சாலை பூஜைகள் தொடங்கி நேற்று காலை மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கும்பாபிஷேக விழாக் குழுவினர் மற்றும் கோவில் கமிட்டி நிர்வாகிகள் செய்தனர்.

# அம்மா உணவகங்களில் சப்பாத்தி விற்பனை இல்லை





சென்னை, செப். 13

சென்னை மாநகராட்சியில் 407 அம்மா உணவகங்கள் உள்ளன. காலை உணவாக இட்லி ஒரு ரூபாய். பொங்கல் ரூ.5க்கு விற்பனை செய்யப்படுகிறது. மதியம் சாம்பார், எலுமிச்சை, கறிவேப்பிலை சாதம் ரூ.5க்கும், தயிர்சாதம் ரூ.3க்கும் விற்கப்படுகிறது.

மாலையில் 2 சப்பாத்தி ரூ.3க்கு விற்கப்படுகிறது. இது ஏழை எளிய மக்களுக்கு வசதியாக இருந்தது. அதே நேரம் ஒரே விதமான உணவே தினமும் வழங்கப்படுவதால் மக்களிடையே வரவேற்பும் குறைந்துள்ளது.

ஆனாலும் அம்மா உணவகங்களை நம்பி இருப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கிடையில் மாலை நேரம் எப்போது சென்றாலும் சப்பாத்தி இல்லை என்கிறார்கள். இதற்கு காரணம் சாலையோர கடைகளில் ஒரு சப்பாத்தி ரூ.3 என்ற அடிப்படையில் மொத்தமாக விற்றுவிடுவதாக கூறப்படுகிறது. இந்த மாதிரி புகார்கள் தொடர்ந்து வந்ததால் சப்பாத்தி விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சியில் இருந்து மாவு வழங்கப்படவில்லை. இன்னும் ஒரு மாதம் வரை சப்பாத்தி மாவு வழங்கப்பட மாட்டாது என்கிறார்கள் அதிகாரிகள். இந்த உணவகங்களை நடத்துவதால் ஆண்டுக்கு ரூ.120 கோடி வரை நஷ்டம் ஏற்படுவதாக கூறப்படுகிறது. ஆனால் இதை முறையாக மேம்படுத்தி குறைந்த விலையில் உணவு கிடைத்தால் பல்லாயிரக் கணக்கானோருக்கு உதவியாக இருக்கும் என்கிறார்கள்.

# பர்கூர் மலை கிராமத்தில் வறட்சியை தாங்கும் புதிய ரக கேழ்வரகு சாகுபடி



ஈரோடு, செப். 13

பழங்குடியின மக்கள் கேழ்வரகு பயிரை அதிகமாக சாகுபடி செய்கின்றனர். கேழ்வரகு பயிரில் ஒரு ஏக்கருக்கு 900 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது.

ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி பர்கூர், கடம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் கிராம மக்கள் ராகி, பீன்ஸ், மரவள்ளி கிழங்கு உள்ளிட்ட பயிர்களை அதிகமாக சாகுபடி செய்து வருகின்றனர். இப்பகுதியில் 4 ஆயிரம் ஹெக்டேரில் கேழ்வரகு பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இந்நிலையில் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலை க்கழகம் அத்தியந்தல் 1 என்ற புதிய ரக கேழ்வரகை அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய ரக கேழ்வரகு பர்கூர் மலைப்பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் முதல் முறையாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து உழவியல் விஞ்ஞானி சரவணகுமார் கூறியதாவது: ஈரோடு மாவட்ட மலை கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மக்கள் தங்களது உணவுக்காக கேழ்வரகு பயிரை அதிகமாக சாகுபடி செய்கின்றனர். ஏற்கனவே அவர்கள் பயிரிட்ட கேழ்வரகு பயிரில் ஒரு ஏக்கருக்கு 900 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. தற்போது புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள அத்தியந்தல் 1 என்ற ரகத்தில் ஏக்கருக்கு 1,500 கிலோ மகசூல் கிடைக்கு ம் என கண்டறியப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் முதல்முறையாக பர்கூர் அருகே கொங்காடை கிராமத்தில் 10 ஏக்கரில் புதிய ரக கேழ்வரகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பயிர் வறட்சியை தாங்கி வளரும் தன்மையுடையது. பலத்த காற்று வீசும் போது எளிதில் சாய்ந்து விடாது. நோய் எதிர்ப்பு திறன் மிக்கது. எனவே விவசாயி களும் ஆர்வமாக இந்த பயிரை சாகுபடி செய்து ள்ளனர். அவர்களுக்கு ஒருங்கிணைந்த சாகுபடி தொழில்நுட்பம் குறித்து செய்திகள் முறை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# மாநில அளவிலான சதுரங்க போட்டியில் குமாரபாளையம் அரசு பள்ளி மாணவன் தேர்வு



நாமக்கல், செப். 13

தமிழக அரசின் விளையாட்டுத்துறை சார்பில் நாமக்கல் மாவட்ட அளவிலான சதுரங்க போட்டிகள் திருச்செங்கோட்டில் நடைபெற்றது. இதில் பல்வேறு வயது பிரிவின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன.

தமிழக அரசின் விளையாட்டுத்துறை சார்பில் நாமக்கல் மாவட்ட அளவிலான சதுரங்க போட்டிகள் திருச்செங்கோட்டில் நடைபெற்றது. இதில் பல்வேறு வயது பிரிவின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் 11 வயது பிரிவின் கீழ் நடந்த போட்டியில், குமாரபாளையம் அருகே தர்மதோப்பு, வாசுகி நகர் ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர் சையத் பாசித் பங்கேற்று விளையாடி, 2ம் பரிசு பெற்று சாதனை படைத்தார்.

இவருக்கு பதக்கம், சான்றிதழ் மற்றும் கேடயம் பரிசாக வழங்கப்பட்டது. இவர் மாநில அளவிலான போட்டிக்கு தேர்வாகி உள்ளார்.

இவரை பள்ளியின் தலைமை ஆசிரியை நாகரத்தினம், பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் ஜீனத், பி.டி.ஏ.தலைவர் தம்பி, ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவியர் உள்பட பலர் வாழ்த்தினர்.

# திருநின்றவூர் ஜெயா கலை கல்லூரியில் கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு



ஆவடி, செப். 13

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் டிசம்பர் மாதம் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

திருவள்ளூர் மாவட்ட அளவிலான 26ம் ஆண்டு கராத்தே போட்டி திருநின்றவூர் ஜெயா கலை கல்லூரியில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. போட்டியில் திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 700 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். வயது அடிப்படையில் 70 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றது.

இறுதி போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. முன்னதாக சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சரும் ஆவடி சட்டமன்ற உறுப்பினருமான சா.மு.நாசர் மற்றும் ஜெயா கல்வி குழும தலைவர் பேராசிரியர் கனகராஜ் ஆகியோர் பங்கேற்று போட்டியை கண்டுகளித்தனர். பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் உதவித்தொகை வழங்கினர்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட சி. ஆர். பி. எப். டி.ஐ.ஜி. எஸ்.ஜெயபாலன், திருவள்ளூர் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் எஸ்.மூர்த்தி ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் டிசம்பர் மாதம் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள். மாவட்ட அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிக்கான ஏற்பாடுகளை கராத்தே தொழில்நுட்ப இயக்குனர் விஜயராகவன், செயலாளர் தக்ஷிணா மூர்த்தி, தலைவர் ராஜா, சேர்மன் லட்சுமி காந்தன், துணை செயலாளர் ஏ. ரமேஷ்குமார், பொருளாளர் தனசேகர், மற்றும் பயிற்சியாளர்கள், டி. தியாகராஜன், எஸ். தீபன், டி.ஏமலதா, ஆர். சித்ரா, சந்தோஷ் குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# வெளி மாநிலத்தவருக்கு பொருட்கள் வழங்காவிட்டால் நடவடிக்கை ரேஷன் கடை ஊழியர்களுக்கு அதிகாரி எச்சரிக்கை



திருப்பூர், செப். 13

இடம் பெயரும் தொழிலாளர்கள் பயன் பெற ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு திட்டத்தை மத்திய அரசு துவக்கியது. ரேஷன் கடைகளில் இருந்த விரல் ரேகை பதிவு கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

தமிழக ரேஷன் கடைகளில் பிற மாநிலத்தவருக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்க மறுப்பதாக புகார் எழுந்துள்ளது. இடம் பெயரும் தொழிலாளர்கள் பயன் பெற ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு திட்டத்தை மத்திய அரசு துவக்கியது. இத்திட்டத்தின் கீழ் தமிழக கார்டுதாரர்கள், எந்த மாநில ரேஷன் கடையிலும் அரிசி, கோதுமை வாங்கலாம். தமிழக ரேஷன் கடைகளில் பிற மாநில கார்டுதாரர்களின் விரல் ரேகையை பதிவு செய்து கிலோ அரிசி 3 ரூபாய்க்கும், கிலோ கோதுமை 2 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு மகளிர் உரிமை தொகை 1,000 ரூபாய் வழங்கும் திட்டத்திற்கு பயனாளிகளை தேர்வு செய்ய, தமிழகத்தை சேர்ந்த கார்டுதாரர்களின் வீடுகளில் இந்தாண்டு ஜூலையில் விண்ணப்பம் வழங்கியது. இதற்காக நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் விண்ணப்பதாரர்களின் விரல் ரேகை பதிவு செய்யப்பட்டன. இதற்கு ரேஷன் கடைகளில் இருந்த விரல் ரேகை பதிவு கருவிகள் பயன்படுத்தப்பட்டன. அதனால் அம்மாத இறுதியில் பிற மாநிலத்தவருக்கு ரேஷன் பொருட்கள் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஆகஸ்டில் இருந்து மீண்டும் பொருட்கள் வழங்க அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் பல கடைகளில் பிற மாநிலத்தவருக்கு ரேஷன் பொருட்களை வழங்க ஊழியர்கள் மறுப்பதாக புகார் எழுந்துள்ளது. இது குறித்து ரேஷன் ஊழியர்கள் கூறுகையில், பிற மாநிலத்தவருக்கு வழங்குவதற்கு ஏற்ப கூடுதலாக பொருட்களை அனுப்புவதில்லை. அதனால் அவர்களுக்கு வினியோகிக்க முடிவதில்லை என்றனர். உணவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் பணிபுரியும் வட மாநில தொழிலாளர்கள் மிகவும் ஏழ்மையில் உள்ளதால், ரேஷன் கார்டை குடும்பத்தினரிடம் வழங்கி விட்டு வந்துள்ளனர். இதனால் பலர் தமிழகத்தில் பொருட்களை வாங்குவதில்லை. ஜூலையில் 381, ஆகஸ்டில் 615, இம்மாதத்தில் 90 பேர் பொருட்களை வாங்கியுள்ளனர். பிற மாநிலத்தவருக்கு பொருட்கள் வழங்க மறுக்கும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பி.ஏ.பி. 4ம் மண்டல பாசனத்திற்கு ஒரு சுற்று தண்ணீர் திறப்பதற்கு விவசாயிகள் எதிர்ப்பு

திருப்பூர், செப். 13

4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்படுகிறது காண்டூர் கால்வாயில் நீர் திறக்கப்பட்டு ஒரு வார காலமாகியும் வினாடிக்கு 1150 கன அடி என்ற அளவில் திருமூர்த்தி அணைக்கு திருப்பி விடவில்லை

பி.ஏ.பி. பாசனம் மூலம் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் சுமார் 4 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்படுகிறது பி.ஏ.பி. விவசாயிகள் நல சங்கம் திருப்பூர் மாவட்ட உப்பாறுவிவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் கலந்தாய்வு கூட்டம் கோட்டமங்கலத்தில்நடந்தது.கூட்டத்திற்கு ராமலிங்கம் தலைமை தாங்கினார்.

சிவக்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பி.ஏ.பி. நான்காம் மண்டல பாசனத்திற்கு ஒரு சுற்று தண்ணீர் வழங்குவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய நீரியல் விவரங்களை வெளியிடாமல் தண்ணீர் திருட்டை ஒழித்திடாமல் ஒரு சுற்று தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட கன அடி தண்ணீர் திருமூர்த்தி அணையில் இருந்து வெளியேற்றாமலேயே வெளியேற்றப்பட்டதாக போலியான பதிவேடுகள் பராமரித்து உள்ளனர். மடைகள் அனைத்திற்கும் ஒரு சுற்றுக்கு ஏழு நாட்கள் தண்ணீர் வழங்காமல் சில இடங்களில் 7 நாட்கள், சில இடங்களில், 5 நாட்கள் சில இடங்களில், 3 நாட்கள் என்று பாரபட்சமாக தண்ணீர் வழங்கப்படுவது ஏன். ஒவ்வொரு கால்வாயிலும் ஏற்படும் நீரிழப்பு விவரங்களை வெளியிட வேண்டும். காண்டூர் கால்வாயில் நீர் திறக்கப்பட்டு ஒரு வார காலமாகியும் வினாடிக்கு 1150 கன அடி என்ற அளவில் திருமூர்த்தி அணைக்கு திருப்பி விடவில்லை.

கடந்த 5 ஆண்டுகளாக போதிய மழைப்பொழிவு கிடைக்க பெற்றும் ஒவ்வொரு வருடமும் திருமூர்த்தி அணைக்கு 20 டிஎம்சி., நீர்வரத்து இருந்துள்ள நிலையில் பி.ஏ.பி. ஆயக்கட்டில் பல ஆயிரக் கணக்கான நிலங்கள் வேளாண்மை அல்லாத மாற்று பயன்பாட்டிற்கு பரிவர்த்தனையாகியுள்ளது. திருமூர்த்தி அணை மூலம் பாசனம் பெறும் புதிய ஆயகட்டுமடைகளுக்கு சமச்சீரான அளவில் தண்ணீர் வழங்குவதை ஒரு வார காலத்தில் முடிவு செய்து புதிய நீரியல் கணக்கீடுகளை தெரிவிக்க வேண்டும்.

இல்லையெனில் பி.ஏ.பி. 4ம் மண்டலத்திற்கு நீர் திறப்பு செய்ய திருமூர்த்தி அணைக்கு வருகை தரும் அமைச்சருக்கு கருப்பு கொடி காட்டப்படும்எனவிவசாயிகள் தெரிவித்துள்ளனர். கூட்டத்தில் விவேகானந்தன், ரகுபதி, விஜயசேகர் ரத்தினசாமி, ராஜேஷ் உட்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# ரூ.2 கோடியில் புதிய வணிக வளாகம் கட்டுமான பணிகள்



திருப்பூர், செப். 13

ரூ.2 கோடியில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தின் கட்டுமான பணிகளை நகராட்சி தலைவர் பாப்புகண்ணன் ஆய்வு செய்தார். 22வது வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள், மின்சார வசதிகள், குடிநீர் வசதிகள், சாக்கடை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து பொதுமக்களின் நிறை குறைகளை கேட்டறிந்தார்.

தாராபுரம் நகராட்சி 19வது வார்டு பகுதியான மார்க்கெட் பகுதியில் ரூ.2 கோடியில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தின் கட்டுமான பணிகளை நகராட்சி தலைவர் பாப்புகண்ணன் ஆய்வு செய்தார். பிறகு சர்ச் வீதியில் அடிப்படை வசதிகள் மற்றும் சாக்கடை சுத்தம் செய்யும் பணிகளை ஆய்வு செய்த அவர் கூறுகையில், தாராபுரம் மார்க்கெட் பகுதியில் ரூ.2 கோடியில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகம் தொடங்கப்பட்டு பணிகள் வெகு விரைவாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நகராட்சி நிர்வாகம் முழு முயற்சியுடன் செயல்பட்டு விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார். அதே போன்று தாராபுரம் நகராட்சி 22வது வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள், மின்சார வசதிகள், குடிநீர் வசதிகள், சாக்கடை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து பொதுமக்களின் நிறை குறைகளை கேட்டறிந்தார். 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் எஸ்.டி.நாகராஜ், 19வது வார்டு உறுப்பினர் புனிதா சக்திவேல், நகராட்சி சுகாதார அலுவலர் மணிகண்டன், நகராட்சி சுகாதார ஆய்வாளர் செல்வகுமார், நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் பாலு, நகராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் மக்கள் உடனிருந்தனர்.

# தென்னை வாடல் நோய் குறித்து பொங்கலூர் வேளாண்மை அலுவலர்களுக்கு பயிற்சி

திருப்பூர், செப். 13

பொங்கலூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில், திருப்பூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள்மற்றும்உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். வாணி வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் நோயியல் துறை பேராசிரியர் ஜான்சன், தென்னை மரத்தை தாக்கும் அடித்தண்டு வாடல் நோய் மற்றும் தென்னை வேர் வாடல் நோய் குறித்து பயிற்சியளித்தார். வாடல் நோய் தாக்கப்பட்ட தென்னை மரமட்டையின் நடு அடுக்குகள் ஒளிர் மஞ்சள் நிறத்தில் தோன்றி காலப்போக்கில் விலா எலும்புகள்போல காட்சியளிக்கும். பின்னர் பூங்கொத்து கருகுதல் நடுக்குருத்து அழுகுதல் போன்ற அறிகுறிகளுடன் தென்னை மரங்கள் காய்ந்து மகசூல் பாதிக்கும். இந்த வாடல் நோய் கண்ணாடி இறக்கை பூச்சி (ஸ்டெபானிடிஸ் டிபிகா), தத்துப்பூச்சி (புரோடிஸ்டாமோயஸ்டா) ஆகியவற்றின் மூலம் பரவுகிறது. இப்பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு பவுடர் 200 கிராம் அல்லது பிப்ரோனில் 0.3ஏ குருணையை மணலுடன் 1:1 என்ற விகித்தில் கலந்து குருத்தின் அடிப்பகுதியில் இடவேண்டும் என தெரிவித்தார். தென்னையில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் நோயியல் துறை பேராசிரியர் மருதாசலம் பேசியதாவது: ஒரு மரத்துக்கு ஓர்ஆண்டுக்கு வேப்பம் பிண்ணாக்கு 5 கிலோ, யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஸ் 3.5 கிலோ என்ற அளவில் இட வேண்டும். தென்னை டானிக் 40 மில்லி, 160 மில்லி தண்ணீருடன் கலந்து வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை கட்ட வேண்டும். மேலும் உயிரியல் காரணிகளான டிவிரிடி 100 கிராம், பேசிலஸ் 100 கிராம், அசோஸ்பைரில்லம் 100 கிராம், பாஸ்போ பாக்டீரியா 100 கிராம் மற்றும் வேர் உட்பூசனம் 50 கிராம் ஆகியவற்றை 5 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து வருடத்துக்கு ஒரு மரத்துக்கு இரண்டு முறை இட வேண்டும். மேலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் கோகோகான் என்ற நுண்ணுயிர் கலவையை ஒரு ஏக்கருக்கு 5 லிட்டர் அளவில் 23 மாத இடைவெளியில் தென்னையில் வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும் என்றார். திருப்பூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சுருளியப்பன் பேசுகையில், மாவட்டத்தின் பிரதான பயிராக தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருவதால் தொழில்நுட்ப அலுவலர்கள் அனைவரும் பயிற்சியில் தெரிவிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி தென்னை மகசூல் அதிகரிக்கவும், பயிரினை பாதுகாத்திடவும் வேண்டும் என்றார். தென்னையில் வரும் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியர் கலையரசன் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சியளித்தார். முடிவில் பொங்கலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பொம்மராஜு நன்றி கூறினார்.

# பவானி செல்லியாண்டியம்மன், மாரியம்மன் கோவில் கோபுரங்கள் திருப்பணி தொடங்கியது



பவானி, செப். 13

பவானி நகர மக்களின் காவல் தெய்வமாக விளங்கி வரும் செல்லாண்டி அம்மன் மற்றும் மாரியம்மன் கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டு விமான கோபுரங்கள் திருப்பணி தொடக்க விழா நடைபெற்றது. தொடர்ந்து சங்கமேஸ்வரர் கோவில் சிவா சிவாச்சாரியார், உதயபிரகாஷ் சிவாச்சாரியார் குழுவினர் மூலம் விநாயகர் பூஜை, சங்கல்பம், மஹா கணபதிஹோமம்,வாஸ்து பூஜை நடைபெற்றது. இதை தொடர்ந்து 2ம் கால பூஜை தொடங்கி பாலஸ்தாபன பூஜைகள், மஹா தீபாராதனைநடை பெற்று திருப்பணிதொடக்கவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் பவானி நகர தி.மு.க. செயலாளர் ப.சீ.நாகராசன், நகர்மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன், நகர்மன்ற துணை தலைவர் மணி, அ.தி.மு.க. நகர செயலாளர் சீனிவாசன், முன்னாள் நகர செயலாளர் கிருஷ்ணராஜ்,

பாட்டாளி மக்கள் கட்சி நகர செயலாளர் தினேஷ் குமார் நாயகர், செல்லியாண்டியம்மன் கோவில் திருப்பணி விழா குழுவினர் மகேந்திரன், சண்முகசுந்தரம், பி.என்.ஆர். மனோகரன்,செல்லியாண்டியம்மன் கோவில் சரவணன், தி.மு.க. தலைமை பேச்சாளர் கண்ணன், ஊர் கவுண்டர், ஊர் கொத்துகாரர், 37 சமூக கட்டளைதாரர்கள், பொதுமக்கள், பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர். பவானி செல்லியாண்டி யம்மன், மாரியம்மன் கோவில் உள்பட நரின் பல்வேறு பகுதிகளில் உள்ள அம்மன் கோவில்களில் ஆண்டு தோறும் மாசி திருவிழா மிக விமர்ச்சியாக நடைபெறுவது வழக்கம். இந்த நிலையில் கோவில் திருப்பணிகள் நடைபெற உள்ளது.

இதையொட்டி பவானி செல்லியாண்டியம்மன், மாரியம்மன், பட்டத்தரசியம்மன், எல்லையம்மன், மேட்டு தெரு மாரியம்மன், வர்ணபுரம் மாரியம்மன் கோவில்களில் இந்த ஆண்டு மற்றும் திரப்பணிகள் முடியும் வரை மாசி திருவிழா நடை பெறாது என இந்து சமய அறநிலையத்துறை, விழா குழுவினர் மற்றும் 37 கட்டளைதாரர்கள் முன்னிலையில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்க ப்பட்டது.

# வாழப்பாடி அருகே தொழிலாளி தற்கொலை

சேலம், செப். 13

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே செந்தாரப்பட்டியை சேர்ந்தவர் சுப்ரமணி வயது (37). இவரது மனைவி மணிமேகலை (34), இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

டிரைவரான இவர் தற்போது வாழப்பாடியை அடுத்த நீர்முள்ளிக்குட்டை பகுதியில் உள்ள மாமானார் வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் அளவுக்கு அதிகமாக மது குடித்து விட்டு அடிக்கடி சுப்ரமணி வீட்டிற்கு வந்து மனைவியுடன் தகராறில் ஈடுபடுவது வழக்கம்.

அதேபோல நேற்று முன்தினம் மது குடித்து விட்டு மனைவியுடன் தகராறில் ஈடுபட்டார். தொடர்ந்து கதவை உள்பக்கமாக பூட்டி கொண்டு இருந்தார்.

அவரது மகன்கள் கூரை வழியாக சென்று வீட்டிற்குள் இறங்கி பார்த்த போது சுப்ரமணி தூக்கில் தொங்கிய நிலையில் இறந்து கிடந்தார். இதனை பார்த்த உறவினர்கள் கதறினர். பின்னர் காரிப்பப்படி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனே அங்கு விரைந்து சென்ற போலீசார் சம்பவம் குறித்து விசாரித்தனர். தொடர்ந்து அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# விநாயகர் சிலைகளை நீர் நிலைகளின் கரைப்பதற்கான வழிமுறைகள்



கரூர், செப். 13

விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 18ம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகள் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும் போது, விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசு கட்டுப்பாடு வழிகாட்டுதல்களின் படி (www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது) மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க களிமண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆஃப்பாரிஸ் (PoP),பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோன் (பாலிஸ்டிரின்) கலனைய ற்றதுமான, சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நா நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படும்.

சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உணர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கும ரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம். ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் பொருட்களை பயன்படுத்த கண்டிப்பாக அனுமதிக்கப்படாது. நீர் நிலைகள் மாசுபடுவதை தடுக்கும் பொருட்டு, வனக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகத்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள் பந்தல்களை அலங்கரிக்க பயன்படுத்த வேண்டும். சிலைகளுக்கு வாணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத இரசாயனசாயம் எண்ணை வண்ணப்பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கை பயன்படுத்தக்கூடாது.

சிலைகளை அழகுபடுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு இரசாயனங்கள்கொண்ட பொருட்களுக்குபதிலாக,இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள்மட்டுமேபயன்படுத்தப்பட வேண்டும்.

விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில்மட்டும்தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க அனுமதிக்கப்படும். விநாயகர் சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை பாதிக்காத வாறு கொண்டாடும்படி பொது மக்களுக்கு மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராதாபுரம் பகுதிகளில் தொடர் வறட்சியால் கருகும் தென்னை மரங்கள்



பணகுடி, செப். 13

ராதாபுரம் சுற்றுவட்டார பகுதிகளில் லட்சக்கணக்கில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளது. ஒரு சில கிராமங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் உள்ளது.

நெல்லை மாவட்டம் ராதாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் லட்சக்கணக்கில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில்தொடர்ந்துகடந்த 2 ஆண்டுகளாக இந்த பகுதிகளில் போதிய மழை பெய்யாததால் குளம், கால்வாய், கிணறு உள்ளிட்ட அனைத்து விதமான நீர்நிலைகளும் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படு கிறது. மேலும் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துவிட்டது.ஒருசிலகிராமங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் உள்ளது. இந்நிலையில் மழை இன்றி, பல ஆண்டுகளாக விவசாயிகளால் கஷ்டப்பட்டு வளர்க்கப்பட்ட தென்னைமரங்கள்நீரின்றி கருகி வருகிறது. இதனால் ராதாபுரம் பகுதி விவசாயிகள் வேதனை அடைந்துள்ள னர். கடுமையான பாதிப்புக் குள்ளான விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய நிவார ணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

# இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் சாலை மறியல்



வேலூர், செப். 13

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடந்தது சாலையில் காய்கறிகளை கொட்டினர்

வேலூர் தலைமை அஞ்சல் அலுவலகம் முன்பு கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் லதா தலைமையிலான நிர்வாகிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விலைவாசி உயர்வு, வேலையின்மை, உள்ளிட்டவற்றை கண்டித்தும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினர். மேலும் விலைவாசி உயர்வை குறிக்கும் வகையில் திடீரென சாலையில் காய்கறிகளை கொட்டி மறியலில் ஈடுபட்டனர். இதனால அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.


# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மனை பிரிவுகளுக்கு அனுமதி பெற கால அவகாசம் நீட்டிப்பு: கலெக்டர் தகவல்



விழுப்புரம், செப். 13

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் பழனி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் உள்ளதாவது; விழுப்புரம் மாவட்டத்தில்உள்ளஅனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர்பதிவு செய்யப்பட்ட மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்ட 2017ம் ஆண்டு விதிகளுக்கு உட்பட்ட எவ்வித மாற்றமும் இல்லாமல் 29.02.2024 வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்து அதன்படி 4.9.2023 அன்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்.118 மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்பு பவர்கள் இணையதள முகவரியில் விண்ணப்ப பதிவு செய்யலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் எஞ்சிய அனு மதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறை செய்து கொள்ள கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த இறுதி வாய்ப்பினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டு க்கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு உதவி இயக்குநர், வட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண்.56/ஏ, தாட்கோ வளாகம், அரசு மருத்துவமனை சாலை, விழுப்புரம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என மாவட்ட கலெக்டர் பழனி தெரிவித்துள்ளார்.

# இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா



ஆலங்குடி , செப். 13

இலவச விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாஅமைச்சர்மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது அறிவார்ந்த புத்தகங்களை படித்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம் என அமைச்சர் மெய்யநாதன் பேச்சு புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள அரையப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, கொத்தமங்கலம் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் இலவச விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட கல்வி அலுவலர் ராஜேஸ்வரி தலைமை வகித்தார். விழாவில் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் வழங்கினார். பின்னர் அவர் பேசுகையில், பல தடைகளை கடந்து சோதனைகளை தாண்டி சென்றால்தான் சாதனை யை அடைய முடியும். மாணவ மாணவிகள் கல்வி, விளையாட்டு, நல்ல பழக்க வழக்கங்கள் என அனைத்து துறைகளிலும் முன்னிலை வகிக்க வேண்டும். கொத்தமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் சிலர் சிலம்பம் பயிற்சியை வெளிப்படுத்தினர். அடுத்த ஆண்டு இங்குள்ள அனைத்து மாணவிகளும் சிலம்பம் கற்றுக் கொள்ள வேண்டும். மாணவ மாணவிகள் அறிவார்ந்த புத்தகங்களை படித்து பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் கவுரவப்படுத்தும் வகையில் முன்னேற வேண்டும். உங்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்க வீட்டில் பெற்றோரும் பள்ளிகளில் ஆசிரியர்களும் உழைத்து வருகின்றனர். இந்த வாய்ப்பை பயன்படுத்தி நன்றாக படித்து அனைவரும் உயர்ந்த இடத்திற்கு செல்ல வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் ஆலங்குடி தாசில்தார் பாலசுப்ரமணியன், திருவரங்குளம் ஒன்றிய சேர்மன் வள்ளியம்மை தி.மு.க மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமணி, கிழக்கு ஒன்றிய செயலாளர் ரவி, கே.வி. சுப்பையா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பண்ருட்டி அருகே கிணற்றில் விழுந்த மாணவன் மீட்பு

கடலூர், செப். 13

சங்கர்குமார் பேர்பெரியான் குப்பம் அரசு பள்ளியில் பிளஸ்2 படித்து வருகிறார். எதிர்பாராத விதமாக அருகில் இருந்த கிணற்றில் தவறி விழுந்தார்.

பண்ருட்டி அடுத்த செடுத்தான் குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் ஜெய்சங்கர்.

இவரது மகன் சங்கர்குமார்(வயது17). இவர்பேர்பெரியான் குப்பம் அரசு பள்ளியில் பிளஸ்2 படித்து வருகிறார். இந்நிலையில் நேற்று வீட்டிலிருந்து பள்ளிக்கு செல்வதாக கூறிவிட்டு அந்த பகுதியில் உள்ள விவசாய நிலப்பகுதிக்கு சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்து பள்ளிக்கு சென்றார். அப்போது எதிர்பாராத விதமாக அருகில் இருந்த கிணற்றில் தவறி விழுந்தார்.

இதை பார்த்த சக மாணவர்கள் முத்தாண்டிக்குப்பம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று கிணற்றுக்குள் தவறி விழுந்த மாணவன் சங்கர் குமாரை பத்திரமாக மீட்டனர்.

# போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் உயர்அதிகாரிகள் ஆலோசனை



கோவை, செப். 13

காவல்துறையில் சீர்திருத்தம் தொடர்பாக அலுவலர்களுடன் விவாதம் போலீஸ் ஏ.டி.ஜி.பி. உள்பட அதிகாரிகள் பலர் பங்கேற்பு

மேற்கு மண்டல காவல்து றையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த பணிகள் குறித்த 5வது போலீஸ் கமிஷன் ஆலோசனைக் கூட்டம், கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஏ.டி.ஜி.பி மகேஷ்குமார்அகர்வால், முன்னாள் நீதிபதி செல்வம், முன்னாள் கலெக்டர் அலாவுதீன் மற்றும் முன்னாள் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட கலெக்டர்கள் கிராந்திகுமார்பாடி, அருணா, கிறிஸ்துராஜ், ராஜகோபால்சுன்கரா, உமா, கார்மேகம், சராயு, சாந்தி, கோவை மாநகராட்சி கமிஷனர்பிரதாப், போலீஸ் கமிஷனர்கள் பாலகிருஷ்ணன், பிரவீன் குமார் அபினபு, விஜயகுமாரி, மேற்கு மண்டல ஐ.ஜி. பவானிஸ்வரி, டி ஐ ஜிக்கள் சரவணசுந்தர், ராஜேஸ்வரி, எஸ்.பி.க்கன் பத்ரி நாராயணன், பிரபாகர், சாமிநாதன், ஜவகர், அருண் கபிலன், ராஜேஷ் கண்ணன், ஸ்டீபன் ஜேசு பாதம், சரோஜ் குமார் தாகூர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.இந்தக் கூட்டத்தில் காவல்து றையில் பணிநியமனம், ஊதியம், பணிகளுக்கான நெறிமுறை, மன அழுத்தம், மனஉளைச்சலை போக்குவது உள்ளிட்ட அம்சங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது.

# அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி முடித்த 98 மாணவர்களுக்கு சான்றிதழ் அமைச்சர் வழங்கினார்



சென்னை, செப். 13

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சமூக நீதி கோட்பாட்டினை செயல்படுத்திடும் வகையில் கோவில்கள் சார்பில் 8 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள், 4 ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள், 3 வேத ஆகம பாடசாலை, 3 தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள் மற்றும் 2 பிரபந்த விண்ணப்ப பாட சாலை என மொத்தம் 20 பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 20222023 ஆண்டில் பழனி, மதுரை, திருச்செந்தூர், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் ஓராண்டு பயிற்சி முடித்த 94 மாணவர்களுக்கும், மதுரை, மீனாட்சி சுந்தரேசுவரர் ஓதுவார் பயிற்சிப் பள்ளியில் மூன்றாண்டு பயிற்சி முடித்த 4 மாணவர்களுக்கும் ஆக மொத்தம் 98 மாணவர்களுக்கு அதற்கான சான்றிதழ்களை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று வழங்கினார். மேலும், 2023 2024 ம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, கோவில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி முடித்தவர்கள் பணி அனுபவம் பெற்று தங்களை செம்மைப்படுத்தி கொள்ளும் வகையில் மூத்த அர்ச்சகர்களின் கீழ் ஓராண்டிற்கு அனுபவ பயிற்சி பெற மாத ஊக்கத் தொகையாக ரூ.8 ஆயிரம் பயிற்சிப் பெறும் கோவில்களில் இருந்து வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அதன்படி கோவில்களில் பணிபுரியும் மூத்த அர்ச்சகர்களின் கீழ் அனுபவ பயிற்சி பெறுவதற்கு 2007 2008ம் ஆண்டு அர்ச்சகர் பயிற்சி நிறைவு செய்த 71 மாணவர்களும், 20222023ம் ஆண்டு பயிற்சி நிறைவு செய்த 94 மாணவர்களும் ஆக மொத்தம் 165 மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு அனுபவ பயிற்சி வழங்க அரசாணையில் தெரிவித்துள்ள வழி காட்டுதல்களின்படி செயல்பட சம்மந்தப்பட்ட மண்டல இணை ஆணையர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படி இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, பிறவி மருந்தீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான நகரப்பகுதியில் அமைந்துள்ள 2 ஏக்கர் 72 சென்ட் நிலம் தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பில் இருந்தது. அதே போல மன்னார்குடி வட்டம், கோட்டூர், கொழுந்தீஸ்வரசுவாமி கோவிலுக்கு சொந்தமாக 6 ஏக்கர் 89 சென்ட் பரப்பிலான புன்செய் நிலங்கள் 20 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த 2 ஆக்கிரமிப்புகளும் மீட்கப்பட்டு கோவில் வசம் சுவாதீனம் பெறப்பட்டு உள்ளது. அந்நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லை கற்கள் நட்டு பாதுகாக்கப் பட்டுள்ளன. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.32 கோடியாகும்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023



# ஆதரவற்றோருக்கு உணவளித்த ஆத்மிகா.. வாழ்த்தும் ரசிகர்கள்

ஹிப்ஹாப் ஆதி இயக்கி நடித்திருந்த மீசைய முறுக்கு படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்குகதாநாயகியாகஅறிமுகமானவர்ஆத்மிகா.அதன்பின்னர்கோடியில் ஒருவன், காட்டேரி, கண்ணை நம்பாதே, திருவின் குரல் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். சமூக வலைதளத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஆத்மிகா அடிக்கடி புகைப்படங்களை பகிர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார். இறை நம்பிக்கை அதிகம் கொண்ட நடிகை ஆத்மிகா நேரம் இருக்கும்போது கோவில்களுக்கும் சென்று வருகிறார். இந்நிலையில், இவர் சென்னை, வடபழனி முருகன் கோவிலில் ஆதரவற்றவர்களுக்கு அன்னதானம் வழங்கி உள்ளார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. ஆத்மிகாவின் இந்த செயலை பார்த்த ரசிகர்கள் அவரை வாழ்த்தி கமெண்ட் செய்து வருகின்றனர்.

# லியோ இசை வெளியீட்டு விழா சென்னை திரும்பிய விஜய்



நடிகர்விஜய்தற்போதுஇயக்குனர்லோகேஷ்கனகராஜ் இயக்கத்தில் 'லியோ' திரைப்படத்தில் நடித்துள்ளார். திரைப்பிரபலங்கள் பலர் நடித்துள்ள இந்த திரைப்படம் அக்டோபர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதைத்தொடந்து விஜய்யின் 68 வது படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு இயக்குகிறார். கல்பாத்தி எஸ் அகோரம் சார்பில் ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். 'தளபதி 68' என தற்காலிகமாக பெயர் வைத்துள்ள இப்படத்தின் பணிகள் தொடக்க நிலையில் உள்ளன. இப்படத்தில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், 3டி விஎஃப்எக்ஸ் (3D VFX) டெக்னாலஜி இப்படத்தில் பயன்படுத்தப்படவுள்ளது. இதற்காக படக்குழு சமீபத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் சென்றிருந்தனர். இந்நிலையில், நடிகர் விஜய் அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பியுள்ளார். விமான நிலையத்தில் இவர் செல்லும் வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. இதற்கு 'லியோ' இசை வெளியீட்டு விழாவிற்காக விஜய், சென்னை திரும்பியுள்ளதாக ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகின்றனர்.



# சர்வதேச புகழ் நாயகனை ஸ்கேமர் என அழைப்பது சரியா? சுரேஷ் காமாட்சி ஆதரவு

தமிழ் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளரான ஏ.ஆர்.ரகுமானின் 'மறக்குமா நெஞ்சம்' இசை நிகழ்ச்சி செப்டம்பர் 10ஆம் தேதி சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்றது. 25 ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதால் தள்ளு முள்ளு ஏற்பட்டது. பல ஆயிரம் கொடுத்து டிக்கெட் வாங்கியவர்கள் அரங்கத்திற்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சி சமூக வலைதளத்தில் பேசுபொருளானது. இதையடுத்து ஏ.ஆர்.ரகுமான் தவறுகளுக்கு வருந்துவதாக தெரிவித்திருந்தர். மேலும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் தவறுகளுக்கு பொறுப்பெற்று கொள்வதாக அறிவித்திருந்தனர். ஏ.ஆர்.ரகுமானுக்கு திரைப்பிரபலங்கள் பலர் தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், ஏ.ஆர்.ரகுமானுக்கு ஆதரவு தெரிவித்து இயக்குனர்சுரேஷ் காமாட்சி பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "இசையமைப்பாளர் ஏ. ஆர். ரகுமான் நடத்திய இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட தவறுகள் கேள்வி கேட்கப்பட வேண்டியவைதான். எப்போதும் தன் சார்ந்து நடக்கும் நிகழ்வுகளில் மிகக் கவனமாக இருப்பவர் இந்தமுறை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களை நம்பிவிட்டதில் ஏகப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவற்றிற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. ஏ.ஆர்.ரகுமானும் தனது வருத்தத்தை பதிவு செய்துள்ளார். இருந்தும் சிலர் இந்த நிகழ்வை வைத்துக் கொண்டு வன்மத்தைக் கக்கத் தொடங்கியிருப்பது கண்டிக்கத்தக்கது. ஆஸ்கார் விருது விழா மேடையில் தமிழில் பேசி பெருமைப்படுத்திய மாபெரும் கலைஞனை இவ்வொரு நிகழ்வை வைத்து அசிங்கப்படுத்துவது மிக மிகத் தவறான செயல். இத்தனை வருட சாதனைகளை ஒருங்கிணைப்பாளர்களின் கவனக்குறைவால் ஏற்பட்ட ஒரு நிகழ்வால் இழந்துவிட்டதாகப் பேசுவது சரியானதல்ல. நிகழ்விற்குப் பொறுப்பேற்று சீர்செய்யும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளபோது மலிவான அரசியல் செய்யும் சிலரின் சந்தர்ப்பவாத பேச்சுக்கு நாமும் ஒத்து ஊதுவது கேவலமான நாகரீகமற்ற செயல். அவரது சாதனைகளைக் கூட விட்டுவிடுங்கள்... மனிதாபிமான செயல்களை எடுத்துக்கொண்டால் அவதூறு பேசும் நாக்குகள் சற்று கூசவே செய்யும். 2016 மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டி வழங்கினார். 2018 இல் கேரள மக்கள் பாதிக்கப்பட்ட போது இசை நிகழ்ச்சி நடத்தி நிதி உதவி வழங்கியுள்ளார். கொரோனா காலத்தில் நிறைய குடும்பங்களுக்கு உதவியுள்ளார். லைட் மேன் யூனியனுக்கு இசைநிகழ்ச்சி நடத்தித் தந்துள்ளார். ஒற்றை நிகழ்வால் சர்வதேச புகழ் கொண்ட ஒரு நாயகனை ஸ்கேமர் என அழைப்பது சரியான செயலாஎனசிந்தியுங்கள்.நிகழ்ந்ததவறுகளைசரிசெய்யநேரம்கொடுங்கள்.அவராகவே முன்வந்து சரிசெய்யக்கூடியவர்தான். நம்மில் ஒருவரை நாம் தாங்கிப் பிடிக்க வேண்டிய நேரம் இது. வன்மம் பிடித்தவர்களின் நாக்குகளுக்கு நாமும் இரையாக வேண்டாம். மாபெரும் கலைஞனின் சிறு சறுக்கலுக்கு உறுதுணையாக நிற்க வேண்டியது நமது கடமை. அதேபோல் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் நிகழ்ந்த தவறுகளுக்கு பொறுப்பேற்று மக்களின் பாதிப்பை உடனடியாக சரிசெய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.





# மார்க் ஆண்டனி திரைப்படத்திற்கான தடை நீக்கம்.. நீதிமன்றம் உத்தரவு

நடிகர் விஷால் தன்னுடைய 'விஷால் பிலிம் பேக்டரி' பட தயாரிப்பு நிறுவனத்திற்காக சினிமா பைனான்சியர் அன்பு செழியனின் கோபுரம் பிலிம்ஸ் நிறுவனத்திடம் இருந்து 21 கோடியே 29 லட்சம் கடனை பெற்றிருந்தார். இந்த கடனை லைகா நிறுவனம் ஏற்றுக் கொண்டதுடன் கடனை திருப்பி செலுத்தும் வரை விஷால் தயாரிக்கும் அனைத்து படங்களின் உரிமையையும் லைகா நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், கடனை செலுத்தாமல் வீரமே வாகை சூடும் என்ற படத்தை வெளியிட விஷாலுக்கு தடை விதிக்க கோரி லைகா நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், 15 கோடி ரூபாயை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய வேண்டும் என விஷாலுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த இருநீதிபதிகள் அமர்வு 15 கோடியை செலுத்தாவிட்டால் தனி நீதிபதி முன்பு உள்ள வழக்கில் தீர்ப்பு வரும் வரை விஷால் தயாரிக்கும் படங்களை வெளியிடக் கூடாது என்று தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து இந்த வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு வந்தபோது,

உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி 15 கோடி ரூபாயை நீதிமன்றத்தில் செலுத்தாமல் இருந்தது, சொத்து விவரங்களை தாக்கல் செய்யாதது குறித்து நேரில் ஆஜராகி விளக்கமளிக்க விஷாலுக்கு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், அவர் நடித்துள்ள மார்க் ஆண்டனி படத்தை வெளியிட தடை விதித்தும் உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி பி.டி.ஆஷா முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, நடிகர் விஷால் நேரில் ஆஜராகியிருந்தார். அப்போது உயர் நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவுகளின்படி சொத்து விவரங்கள் குறித்து மனுத்தாக்கல் செய்யவில்லை, 15 கோடி ரூபாயை இதுவரை உயர் நீதிமன்றத்துக்கு செலுத்தவில்லை, தன்னிடம் நிதி ஆதாரம் இல்லை எனத் தெரிவித்த அதே நாளில் ஒரு கோடி ரூபாயை விஷால் வங்கி கணக்கில் பெறப்பட்டுள்ளது,

இது நீதிமன்றத்துக்கு தவறான தகவலை தெரிவிப்பது என, நடிகர் விஷாலின் செயல்பாடு குறித்து நீதிபதி அதிருப்தி தெரிவித்தார். இதற்கு பதிலளித்த விஷால் தரப்பு வழக்கறிஞர், தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டதால் சொத்து விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், நிதி ஆதாரம் இல்லை எனக் கூறிய நாளில் விஷாலின் வங்கிக் கணக்கில் 91 ஆயிரம் ரூபாய் மட்டுமே இருந்தது என்றும் தெரிவித்தார். அப்போது குறுக்கிட்ட நீதிபதி, உயர் நிதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு கடந்த ஏப்ரலில் 15 கோடி ரூபாய் செலுத்த வேண்டிய உத்தரவை உறுதி செய்த பிறகும், சொத்து விவரங்கள் குறித்து மனுத்தாக்கல் செய்யாதது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார். விஷால் தரப்பில் இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்க ஒரு மத்தியஸ்தர் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து லைகா நிறுவனத்திற்கு செலுத்தப்படும் தொகை எப்படி செலுத்தப்படும் என்றும் நீதிபதி உத்தரவுபடி 15 கோடி ரூபாய் செலுத்தாவிட்டால் படங்கள் வெளியிட தடை விதிக்கப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார். இறுதியாக விஷால் கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி முதல் கடந்த 13ஆம் தேதி வரை அவரது நான்கு வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். மேலும் அவரது சொத்துகள் குறித்த ஆவணங்களையும் தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார். அதுமட்டுமல்லாமல், 'மார்க் ஆண்டனி' திரைப்படத்தின் தயாரிப்பிற்கும் விஷாலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் இப்படத்தை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



# வீரர்களுக்கு தண்ணீர் கேன் கொடுக்க வந்தேன் சதம் அடித்த கேஎல் ராகுல் நெகிழ்ச்சி

பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய வீரர் கே.எல்.ராகுல் சதம் விளாசினார். மைதானத்திற்கு எந்த உபகரணத்தையும் நான் கொண்டு வரவில்லை.

இந்தியாபாகிஸ்தான்அணிகளுக்குஇடையிலானகிரிக்கெட்போட்டியில்இந்தியா 356 ரன்கள் குவித்தது. பாகிஸ்தான் 128 ரன்னில் சுருண்டது. இந்தியா 228 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் இந்திய அணியின் வீரர்கள் விராட் கோலி மற்றும் கேஎல் ராகுல் சதம் அடித்து அசத்தினர். கேஎல் ராகுல் காயம் காரணமாக ஓய்வு பெற்று வந்த முதல் போட்டியிலேயே சதம் அடித்து அனைவரின் பார்வையும் தன் பக்கம் திருப்பினார். இந்நிலையில் வீரர்களுக்கு தண்ணீர் கேன் கொடுக்கும் வேலையைதான் செய்வேன் என நினைத்தேன் என கேஎல் ராகுல் தெரிவித்துள்ளார்.இதுகுறித்துஅவர்கூறியதாவது:போட்டிக்கானடாஸ்போடுவதற்கு 5 நிமிடத்திற்கு முன்பு நீ இந்த போட்டியில் விளையாடுகிறாய் என ராகுல் டிராவிட் கூறினார். மைதானத்திற்கு எந்த உபகரணத்தையும் நான் கொண்டு வரவில்லை. வீரர்களுக்கு தண்ணீர் கேன் கொடுக்கும் வேலையைதான் செய்வேன் என நினைத்தேன். இவ்வாறு அவர் கூறினார்.





# இந்திய கேப்டன்களில் யாரும் படைக்காத சாதனை படைத்த ரோகித் சர்மா

சூப்பர் 4 சுற்றில் பாகிஸ்தானை 228 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வீழ்த்தியது. கங்குலி, எம்எஸ் டோனி, விராட் கோலி உட்பட வேறு எந்த இந்திய கேப்டனும் இந்த சாதனையை படைத்ததில்லை.

ஆசிய கோப்பை 2023 கிரிக்கெட் தொடரில் இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற்ற முக்கியமான சூப்பர் 4போட்டியில் பாகிஸ்தானை 228 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வீழ்த்தியது. இந்த மிகப்பெரிய வெற்றியால் கூடுதல் ரன் ரேட்டை பெற்றுள்ள இந்தியா இறுதி போட்டிக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பு அதிக அளவில் உறுதியாகியுள்ளது. முன்னதாக 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு எதிராக நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நடைபெற்ற கடைசி போட்டியில் இந்தியா 317 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த போட்டியில் ரோகித் சர்மா தலைமையில் ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரு போட்டியில் அதிக ரன்கள் வித்தியாசத்தில் வென்ற அணி என்ற உலக சாதனையை இந்தியா படைத்தது. அந்த நிலையில் இந்த போட்டியில் 228 ரன்கள் வித்தியாசத்தில் வென்ற இந்தியா வரலாற்றில் பாகிஸ்தானுக்கு எதிராக அதிக ரன்கள் (228) வித்தியாசத்தில் மெகா வெற்றியை பதிவு செய்து சாதனை படைத்தது. இதன் வாயிலாக ஒருநாள் கிரிக்கெட்டில் 2 வெவ்வேறு போட்டிகளில் 200க்கும் மேற்பட்ட ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்த முதல் இந்திய கேப்டன் என்ற தனித்துவமான சாதனையை ரோகித் சர்மா படைத்துள்ளார். இதற்கு முன் கங்குலி, எம்எஸ் டோனி, விராட் கோலி உட்பட வேறு எந்த இந்திய கேப்டனும் 2 வெவ்வேறு ஒருநாள் போட்டிகளில் 200க்கும் மேற்பட்ட ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்ததில்லை. சமீப காலங்களாகவே கேப்டன்ஷிப் பற்றி விமர்சனங்களை சந்தித்து வரும் ரோகித் சர்மா இந்த சாதனைகளுடன் அதற்கு பதிலடி கொடுத்துள்ளார்.

# ஆட்ட நாயகன் விராட் கோலி அல்ல.. மீண்டும் வன்மத்தை கக்கிய கம்பீர்





ஆசிய கோப்பை 2023 கிரிக்கெட் தொடரில் மழைக்கு மத்தியில் நடைபெற்று முடிந்த முக்கியமான சூப்பர் 4 போட்டியில் பாகிஸ்தானை 228 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வீழ்த்தியது. இந்த போட்டியில் ஆட்டநாயகனாக விராட் கோலி தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் இந்த போட்டியில் விராட் கோலியை விட குல்தீப் யாதவ் தான் ஆட்டநாயகன் என்று கவுதம் கம்பீர் விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: என்னை பொறுத்த வரை குல்தீப் யாதவ் ஆட்டநாயகன். மேலும் விராட் கோலி மற்றும் கேஎல் ராகுல் ஆகியோர் சதமும் ரோகித் சர்மா மற்றும் கில் ஆகியோர் நல்ல ரன்களும் அடித்தார்கள் என்பது எனக்கு தெரியும்.ஆனால்ஸ்விங்மற்றும்வேகத்துக்குசாதகமானஇதுபோன்றமைதானங்களில் 8 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் எடுப்பது கடினமாகும். அதிலும் குறிப்பாக சுழலை சிறப்பாக எதிர்கொள்ளக்கூடிய பாகிஸ்தான் பேட்ஸ்மேன்களுக்கு எதிராக அவர் வீசிய பவுலிங் தான் வெற்றியை மாற்றியது. அது தான் அவர் எந்தளவுக்கு தரமான பவுலர் என்பதையும்காட்டுகிறது. குறிப்பாகஅவர்பாகிஸ்தான்பேட்ஸ்மேன்களுக்குகாற்றில் சுழல வைத்து பெரிய சவாலை கொடுத்தார். அது உலகக் கோப்பையில் இந்தியாவுக்கு மிகப்பெரிய நல்ல அம்சமாகும். ஏனெனில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு நிகராக போட்டியின் எந்த சூழ்நிலையிலும் விக்கெட் எடுக்கும் திறமை அவரிடமும் இருக்கிறது. என்று கம்பீர் கூறினார்.



# ஆட்டோகிராப் கேட்ட ரசிகரிடம் சாக்லேட்டை பிடுங்கிய டோனி வீடியோ வைரல்

முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் எம்எஸ் டோனி. இவர் சமீபத்தில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியை நேரில் காணச் சென்றுள்ளார். நடப்பு சாம்பியனான கார்லோஸ் அல்கராஸ் மற்றும் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் இடையேயான ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தை டோனி நேரில் பார்த்து ரசித்தார்.

இந்த வீடியோ சில நாட்களுக்கு முன்னர் சமூக வலைதளங்களில் வைரலானது. டோனி ரசிகர்களிடம் ஜாலியாக பேசுவது விளையாடுவது போன்று இருப்பதால் அவர் தொடர்பான வீடியோ அதிக அளவில் வைரலாகும். இந்நிலையில் தற்போது அது போன்று ஒரு வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில், டோனி ஒரு ரசிகர்கருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். அப்போது ஆட்டோகிராப் போட்ட டோனி ரசிகர் கையில் இருந்த சாக்லெட்டை வாங்கினார். இது எனக்கு தானே எடுத்து வந்தாய் என வேடிக்கையாக பேசினார். உடனே அவரும் சாக்லேட்டை கொடுத்து சிரித்து கொண்டே நகர்ந்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.